**தலைப்பு 153 – காணி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு 153 – காணி அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 29 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 3,391.79 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் இதில் ரூபா 2,890.26 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா501.53 மில்லியன் அல்லது 14.79 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| மீண்டெழுபவை | 282.52 | 270.31 | 12.21 | 4.32 |
| மூலதனம் | 3,109.27 | 2,619.95 | 489.32 | 15.74 |
| மொத்தம் | **3,391.79** | **2,890.26** | **501.53** | **14.79** |

## 2.2 முற்பணக் கணக்கு

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

இமைச்சிற்குரிய 15301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்தஎல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 14.40 | 13.88 | 6.50 | 8.26 | 50.00 | 31.54 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள 7002/0000/000/0383/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 136,370 கட்டுநிதி மீதி காணப்பட்டது.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

காணி அமைச்சின்2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

அமைச்சினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் முறையாகவும் நாளதவரையாகவும் பேணப்பட்டிருக்காமை கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) | கணனிகள், துணைப்பாகங்கள் மற்றும் மென் பாகங்கள் மீதான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (iii) | வாகனங்களை பட்டியல்படுத்தும் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.2.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூன்று செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 25.61 மில்லியன் நிதி ஏற்பாடுகள் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 21 செலவின விடயங்களிற்கு மிகை நிதி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமை காரணமாக நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் சேமிப்பானது வழங்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடுகளில் 10 சதவீதம் முதல் 83 சதவீதம் வரையான வீச்செல்லையில் காணப்பட்டது.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

15301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணக்கக் கூற்றின் பிரகாரம்,அத்திகதியில் உள்ளவாறு அறவிடுதல்கள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 282,526 கூட்டுத்தொகையாக காணப்பட்டதுடன், அந்த நிலுவையான மீதிகள் 01 ஆண்டு முதல் 11 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து நிலவி வந்திருந்த போதிலும், அந்த நிலுவை மீதிகளை அறவிடுதலின் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

(ஆ) 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்குகள் கணக்கிணக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும், அந்த கணக்கிணக்கத்தை செய்வதற்காக கட்டுப்பாட்டுக் கணக்கொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

அமைச்சிற்குச் சொந்தமான 2 மோட்டார் வாகனங்கள் 2 ஆண்டு காலமாக பயன்படுத்தப்படாது வைக்கப்பட்டிருந்தன.

#### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்துதல்

நிதிப்பிரமாணம் 757(2) இன் பிரகாரம் பொருள் மெய்மையாய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்த வேறுபாடுகள் தொடர்பில் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விளக்கமளித்தல்கள் பெறப்பட்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (இ) வெளித்தரப்பினர்களிற்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

சொந்தமான 13 வாகனங்களில் 11 வாகனங்கள் 10 ஆண்டு காலமாகவும், மேலும் 02 வாகனங்கள் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாகவும் முறையாக கையளிக்கப்படாது நில அளவையாளர் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தன.

**(ஈ) ஏனைய நிறுவனங்களிற்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

நிதி அமைச்சிற்குச் சொந்தமாக காணப்பட்ட 2 வாகனங்களும், விவசாயஅமைச்சிற்குச் சொந்தமாக காணப்பட்ட 2 வாகனங்களும் அமைச்சினால் முறையாக கையேற்காது 10 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்பட்டிருந்தன.

**(உ) தீர்க்கப்படாத பொறுப்புகள்**

அமைச்சினால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறுஒருவருடத்திற்கும் குறைவானகாலமாகநிலவிவருகின்றதீர்க்கப்படாதிருந்தபொறுப்புகள் ரூபா 31,271,585 கூட்டுத்தொகையாகக் காணப்பட்டது. மீளாய்வாண்டிற்குரிய ரூபா 581,599 கூட்டுத்தொகையான பொறுப்புகள் ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

இலங்கை மன்றக் கல்லூரியும் இந்தியாவின் மஹர்சீ அரவிந் மன்றமும் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்த 10 நாட்கள் வெளிநாட்டுச் செயலமர்விற்காக காணி அமைச்சின் நான்கு உத்தியோகத்தர்கள் வெளிநாடு சென்றிருந்தனர். அதற்கான தங்குமிட மற்றும் உணவு வசதிகள் பயிற்சி வழங்கும் நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 01/2010/01 ஆம் இலக்க நிதி திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கையின் 6 ஆம் பந்திக்கு முரணாக இணைந்த படியாக ரூபா 1,174,960 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.6 செயலாற்றல்**

செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி அமைச்சின் செயன்முன்னேற்றம் மீதான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) நிறைவேற்றப்பட்டிருக்காத பணிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) காணிகள் தொடர்பான தகவல்களை திரட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 25,000,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) அபிவிருத்திப் பிரிவின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், கைத்தொழில் அபிவிருத்திகளிற்காக காணிகளை ஒதுக்குதல் மற்றும் அமைச்சுக்களிற்கும் அரசாங்க திணைங்களிற்கும் காணிகளை விடுவித்தல் போன்ற பணிகள் இடம்பெற்றிருக்கவில்லை.

**(ஆ) போதியளவில் அடையப்பட்டிருக்காத பணிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க காணிகளை முறையான செயற்பாடுகளிற்காக ஈடுபடுத்தும் செயன்முன்னேற்றம் கீழுள்ளவாறாகும்.

| காணிகள் ஈடுபடுத்தப்பட பணி | செயன்முன்னேற்ற சதவீதம் |
|---|---|
| அரசாங்க காணிகளை பொருளாதார செயற்பாடுகளிற்காக பயன்படுத்துதல் | 45 |
| நீண்டகால குத்தகைக்கு வழங்குதல் | 56 |
| உதவுதொகை படிவங்கள் வழங்குதல் | 48 |
| பிரஜாபூமி உதவுதொகை படிவங்கள் வழங்குதல் | 60 |
| தீர்ப்பனவு கண்காணிப்பிற்காக அங்கீகாரம் வழங்குதல் | 27 |
| பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நீண்டகால குத்தகைக்கு பரிந்துரை செய்தல் | 22 |

(ii) பிம்சவிய நிகழ்ச்சித்திட்ட அமுலாக்கலின் செயன்முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

| ஆண்டு | நிதி ஏற்பாடு | செலவினம் | இலக்கிடப்பட்ட உரிமைச் சான்றிதழ் களின் எண்ணிக்கை | நிள அளவை செய்யப்பட்ட காணித் துண்டுகளின் எண்ணிக்கை | பரிந்துரை செய்யப்பட்டு அங்கீகரிக்கப் பட்ட எண்ணிக்கை | தீர்மானம் பகிரங்கப்படுத்தப்பட்ட / வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட எண்ணிக்கை | ஆட்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட உரிமைச் சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில். | ரூபா மில். | | | | | |
| 2013 | 800 | 668 | 135,000 | 110,630 | 71,315 | 58,690 | 28,402 |
| 2014 | 400 | 445 | 122,090 | 122,239 | 53,448 | 66,759 | 24,242 |
| 2015 | 546 | 413 | 206,580 | 83,957 | 51,475 | 53,484 | 29,043 |

பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் 2015 ஆம் ஆண்டிற்கான செயன்முன்னேற்றத்தை பரிசோதிக்கையில் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரமான இலக்கிடப்பட்ட உரிமைச் சான்றிதழ்களின் எண்ணிக்கை 206,580 ஆனதுடன், அவற்றில் பரிந்துரை செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்த காணித்துண்டுகளின் எண்ணிக்கை 51,475 ஆக காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் தீர்மானங்களை பகிரங்கப்படுத்தும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட காணித்துண்டுகளின் எண்ணிக்கை 53,484 ஆகக் காணப்பட்டது. வருடாந்த இலக்கிடப்பட்ட 206,580 உரிமைச் சான்றிதழ்களின் எண்ணிக்கையில் காணிப் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் மீளாய்வாண்டில் பதிவு செய்யப்பட்டிருந்த காணித் துண்டுகளின் எண்ணிக்கை 43,132 ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் ஆட்களிற்கிடையே வழங்கப்பட்டிருந்த உரிமைச் சான்றிதழ்களின் எண்ணிக்கை 29,043 ஆகும். அது வருடாந்த இலக்குகளில் முறையே 21 மற்றும் 14 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டன.

**(இ) காணிகளை சுவீகரித்தல் செயன்முன்னேற்றம்**

காணிகளை சுவீகரித்தல் செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சில் 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலத்தில் செயற்படுத்தப்பட்டிருந்த காணிகள் சுவீகரிக்கப்பட்டிருந்த கோவைகளின் எண்ணிக்கை 11,428 ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் இழப்பீடுகள் செலுத்தப்பட்டு வேலைகள் முடிவுறுத்தப்பட்டிருந்த கோவைகளின் எண்ணிக்கை 102 ஆக இருந்தது. அத்துடன், கைவிடப்பட்டிருந்த செயற்பாடற்ற கோவைகளின் எண்ணிக்கை 305 ஆக இருந்தது.

(ii) 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை காணிகள் கட்டளைச் சட்டத்தின் 38(அ) இடைக்கால கட்டளை வழங்கப்பட்டு முடிவுறுத்தப்பட்ட கோவைகள் 915 ஆகவும் 2015 ஆம் ஆண்டில் மாத்திரம் கட்டளைச் சட்டத்தின் 38(அ) இடைக்கால கட்டளை வழங்கப்பட வேண்டியிருந்த கோவைகளின் எண்ணிக்கை 3,385 ஆகவும் காணப்பட்டன. இழப்பீடுகள் செலுத்தப்பட்டு வேலைகள் முடிவுறுத்தப்பட்டிருந்த கோவைகளின் எண்ணிக்கை 102 ஆக காணப்பட்டமையால் கட்டளைச் சட்டத்தின் 38(அ) இடைக்கால ஏற்பாடுகள் கட்டளையின் கீழ் காணிகள் சுவீகரிக்கப்பட்டிருந்தமை காரணமாக அக் காணிகளிற்காக இழப்பீடுகளும் அவற்றிற்காக வட்டியும் செலுத்தவேண்டிய நிலை அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது.

(iii) 2015 ஆம் ஆண்டில் காணிகளை சுவீகரிப்பதற்கான இழப்பீடாக ரூபா 1,191,453,286 தொகையும், 99 கோவைகளிற்குரிய காணிகளை சுவீகரிப்பதற்கான இழப்பீடாக ரூபா 545,572,760 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன. அதில் 2005 ஆம் ஆண்டில் சுவீகரிக்கப்பட்டிருந்த காணிகளிற்காக மாத்திரம் ரூபா 92,991,165 தொகையும் 2005 இற்கு முந்திய ஆண்டுகளில் சுவீகரிக்கப்பட்டிருந்த காணிகளிற்காக ரூபா 225,488,171 ஆன வட்டித் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. இதற்கமைய, காணிகள் கட்டளைச்சட்டத்தின் 38(அ) இடைக்கால ஏற்பாடுகள் கட்டளையின் கீழ் காணிகள் சுவீகரிக்கப்படுவது காணிகள் சுவீகரிக்கப்படுவதனை துரிதப்படுத்துவதற்கான போதிலும், சுவீகரித்தமைக்கான இழப்பீடுகளைச் செலுத்துதல் தாமதிக்கப்பட்டமை காரணமாக அவ்வாறு இழப்பீடு செலுத்தும் இறுதித் திகதி வரையிலும் வட்டி செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக கட்டளைச் சட்டத்தின் 38(அ) இடைக்கால ஏற்பாடுகள் கட்டளையின் கீழ் சுவீகரித்தலுக்காக அரசாங்கத்தினால் பெருமளவு செலவு செய்யப்பட்டிருந்தது.

### 3.7 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையானவையாக காணப்பட்டன. தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்த அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் மாதத்தில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு சீனாவில் இடம்பெற்றிருந்த தொழில் அபிவிருத்தி செயலமர்வில் அமைச்சின் மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்) பங்குபற்றியிருந்தார். அதற்காக வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றினால் கற்கைக் கட்டணம், தங்குமிட வசதிகள் மற்றும் ஏனைய வசதிகள் வழங்கப்பட்டிருந்தமையால் விமானச் சீட்டு, காப்புறுதி மற்றும் அமைய படி என்பன குறித்த நிறுவனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், பங்குபற்றியிருந்த உத்தியோகத்தருக்கான உணவிற்காக இணைந்த படியில் 35 சதவீதமான ரூபா 162,999 படியயொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) முன்னாள் காணி அமைச்சரின் அவசர உத்தியோகபூர்வ பயணம் எனக் குறிப்பிட்டு இங்கிலாந்துக்குச் செல்வதற்கான விமானச் சீட்டுக் கட்டணமாக ரூபா 977,145 தொகை 2015 நவம்பர் 20 ஆந் திகதி விமானக் கம்பனியொன்றுக்குச் செலுத்தப்பட்டிருந்தது. இதன்போது விமனச்சீட்டின் பிரதி, உத்தியோகபூர்வ பயணம் தொடர்பான தகவல்கள் அல்லது வெளிநாட்டுப் பயணத்தில் கலந்துகொண்ட பயணிகளின் விபரங்கள் போன்ற உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. பயணத்திற்கான அனைத்து ஆரம்ப நடவடிக்கைகளும் பிரதமரின் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், பிரதமர் அலுவலகத்தின் ஆலோசனையின் பிரகாரம் தொடர்புடைய சகல கொடுப்பனவுகளும் இடம்பெற்றிருந்ததாக அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, அதற்குரிய ஏனைய கட்டணங்களாக ரூபா 95,000 செலுத்தப்பட்டிருந்ததுடன், இத் தொகை வீசா கட்டணம், வீசா விண்ணப்பக் கட்டணம் மற்றும் விமானச் சீட்டின் திகதியை மாற்றுவதற்கான கட்டணம் ஆகியவற்றிற்குச் செலவிடப்பட்டதாகவும் அதற்குரிய ஆவணங்கள் இல்லையென்றும் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், செயலாளரின் அங்கீகாரத்தின் மீது செலுத்தப்பட்டிருந்தது. அக்

கொடுப்பனவுகள் உண்மையாகவே இடம்பெற்றிருந்தமை தனிப்பட்ட முறையில் உறுதிப்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தமையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததாக செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) காணி அமைச்சர் சுகவீனமுற்று மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக இங்கிலாந்தில் இருந்த சந்தர்ப்பத்தில், பதிற்கடமைக்காக இராஜாங்க அமைச்சர் நியமிக்கப்பட்டிருந்தார். இருப்பினும் விசேட உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அமைச்சின் செயலாளர் 5 நாட்கள் இங்கிலாந்துக்கு பிரயாணம் செய்வதற்காக ரூபா 526,721 செலவிடப்பட்டிருந்தது. அமைச்சர் சுகவீனமுற்று இருக்கையில் உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அமைச்சின் செயலாளர் வெளிநாடு சென்றிருந்தமை சர்ச்சைக்குரிய விடயமாக காணப்பட்டது.

**3.8 முகாமைத்துவ நலிவுகள்**

கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) அருச்சல கனிஷ்ட வித்தியாலயத்திற்காக காணியினை சுவீகரித்தல்**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஹோ/கிழக்கு அருச்சல கனிஷ்ட வித்தியாலயத்திற்காக 0.4085 ஹெக்டயார் காணியினை சுவீகரிப்பதற்காக காணிகள் கட்டளைச் சட்டத்தின் 38(அ) இடைக்கால ஏற்பாடுகள் கட்டளையின் பிரகாரம், 1992 ஆம் ஆண்டில் உரிமை கையேற்கப்பட்டிருந்தது. இருப்பினும் அதற்கான உரித்துறுதியினை சமர்ப்பிப்பதற்குரிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுதல் 16 ஆண்டுகள் தாமதிக்கப்பட்ட பின்னர் 2009 ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்றிருந்தது.

(ii) உரிமைத்துவம் தொடர்பில் ஏற்பட்டிருந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட பின்னர் இழப்பீட்டினைச் செலுத்துதல் 2013 ஏப்ரல் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காக 20 ஆண்டுகளிற்கு வட்டி செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது. அதற்கமைய, காணியின் விஸ்தீரணத்திற்காக ரூபா 25,404,000 இழப்பீட்டுத் தொகையும் ரூபா 31,359,755 வட்டித் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) விடுதியொன்றுக்காக வீடொன்றை சுவீகரித்தல்**

காணிகள் கட்டளைச் சட்டத்தின் 38(அ) இடைக்கால ஏற்பாடுகள் கட்டளையின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்பட்டு விடுதியொன்றுக்காக வீடொன்று 2011 செப்தெம்பர் 09 ஆந் திகதியளவில் சுவீகரிக்கப்பட்டு பயன்படுத்தும் உரிமையும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. பயன்படுத்தும் உரிமை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இழப்பீட்டினைச் செலுத்துதல் தாமதிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான இழப்பீடாக ரூபா 19,650,000 தொகையும் வட்டியாக ரூபா 4,342,874 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

**(இ) வெல்லவாய சந்தைக்காக காணியினை சுவீகரித்தல்**

வெல்லவாய நகரத் திட்டமிடல் திட்டத்தின் கீழ் வெல்லவாய சந்தைக்காக வெல்லவாய கிராமத்திலுள்ள காணியிலிருந்து 3 ரூட், 10.4 பர்ச் காணியினை சுவீகரித்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) காணிகள் கட்டளைச் சட்டத்தின் 38(அ) இடைக்கால கட்டளையின் கீழ் 1989 மார்ச் 28 ஆந் திகதிய வர்த்தமானியின் மூலம் உரிமை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2007 ஏப்ரல் மாதம் வரை 18 ஆண்டுகள் கடந்திருந்திருந்த போதிலும், எவ்வித அபிவிருத்தி வேலையும் செய்யப்பட்டிருக்கவில்லை. இடைக்கால கட்டளை வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து உரிமை மாற்றியவருக்கு இழப்பீட்டினைச்

செலுத்தும் வரை வட்டி செலுத்தப்படுதல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இக் காணியில் அபிவிருத்தி வேலையினை மேற்கொள்வதற்கு 18 ஆண்டுகள் எடுத்துக்கொள்ளப்படும் வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அதன்பின்னர் 26 ஆண்டுகள் கடந்ததன் பின்னர் ரூபா 41,729,178 பயனற்ற செலவினமாக வட்டி செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 2007 ஒக்தோபர் 19 ஆந் திகதி இடம்பெற்ற வெல்லவாய நகர அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் தீர்மானத்திற்கமைய, இக் காணியில் மஹிந்த ராஜபக்ஷ மாநாட்டு மண்டபத்தினை நிர்மாணிப்பதற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. காணிகள் கட்டளைச்சட்டத்தின் 38(அ) இடைக்கால கட்டளையின் படி, சுவீகரிப்புச் செய்தல் மிகவும் அத்தியாவசியமான நடவடிக்கைக்காக காணப்பட்ட போதிலும், இங்கு அத்தேவைப்பாடு நோக்கத்திலிருந்து விலகிய நடவடிக்கையாக காணப்பட்டது.

(iii) 1989 மார்ச் 16 ஆந் திகதி காணிகள் கட்டளைச்சட்டத்தின் 5 ஆவது பிரிவின் கீழ் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டு சுவீகரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், கட்டளைச்சட்டத்தின் 7 ஆவது பிரிவின் பிரகாரம் உரிமையினை முன்வைப்பதற்கான அறிவித்தலை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு 19 ஆண்டு காலம் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பின்னர் இழப்பீட்டினைச் செலுத்துவதற்காக 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை 7 ஆண்டு காலம் தாமதிக்கப்பட்டிருந்தது.

(iv) சுவீகரிக்கப்பட்ட காணியின் அளவினைக் காண்பிக்கையில் வர்த்தமானிகளில் காணிகள் கட்டளைச்சட்டத்தின் 7 ஆவது பிரிவின் கீழ் சுவீகரிக்கும் அறிவித்தல் வரையிலும் 0.374 ஹெக்டயார் எனக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், 2011 நவம்பர் 09 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் தூய படிவத்தின் மூலம் காணியின் விஸ்தீரணம் 0.257 ஹெக்டயார் எனக் காட்டப்பட்டிருந்தது. அதற்கமைய, எஞ்சிய காணி வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் சுவீகரிக்கப்பட்டதாக காணியின் உரிமையாளருக்கு அமைச்சினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பான கோவை வீதி அபிவிருத்தி அதிகாரசபையிலும், வெல்லவாய பிரதேச செயலகத்திலும் மொனராகலை மாவட்டச் செயலகத்திலும் காணப்படவில்லை என உரிமையாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது. இப் பிரச்சினை காரணமாக 2014 சனவரி 06 ஆந் திகதி கட்டளைச்சட்டத்தின் 17 ஆவது பிரிவின் கீழ் இழப்பீட்டுத் தொகை தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை அதாவது ஏறத்தாழ ஓராண்டு வரை இழப்பீட்டைச் செலுத்துதல் தாமதிக்கப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 1,599,500 வட்டி செலுத்தப்பட்டிருந்தது.

(v) காணிகள் கட்டளைச்சட்டத்தின் 38(அ) இடைக்கால கட்டளையின் கீழ் துரிதமாக காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கையில் இழப்பீட்டினை செலுத்தும் செயற்பாட்டினை துரிதப்படுத்துவதற்காக முறையொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திராமை காரணமாக இழப்பீட்டினைச் செலுத்தும் காலம் பெருமளவிற்கு தாமதமடைந்திருந்தமையால் இழப்பீட்டினைக் காட்டிலும் கூடியளவில் வட்டி செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது.

## 3.9 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 23 | 20 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 04 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 441 | 408 | 33 |
| (iv) | ஆரம்ப நிலை | 50 | 47 | 03 |
| | மொத்தம் | 519 | 479 | 40 |